# UNDER SEA EXPLORATION OFF THE SHORE OF POOMPUHAR

*by*

**Natana. Kasinathan**

*Director*

DEPARTMENT OF ARCHAEOLOGY

GOVERNMENT OF TAMILNADU

1991

# UNDER SEA EXPLORATION OFF THE SHORE OF POOMPUHAR

First Edition : 1991
Publication No. 109
No. of Copies : 500

© DEPARTMENT OF ARCHAEOLOGY

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை நூலகம்
நூல் சேர்க்கை
எண்.
சென்னை - 600 008

Author :
NATANA. KASINATHAN
DIRECTOR

Printed and Published by :
DEPARTMENT OF ARCHAEOLOGY,
MADRAS-600 028.

# UNDER SEA EXPLORATION

Poompuhar, the celebrated capital and port city of the illustrious Chola of Sangam age is said to have been situated on the confluence of the river Kaveri with the Bay of Bengal. It is also said that it extended upto four Kavatam on both the banks of Kaveri. This city seems to have been in existence even from 3rd century B.C. as the carbon date of a log of wood recovered from Poompuhar clearly shows. An inscription from Barhut, datable to 2nd century B.C. also states that a Buddhist nun of this city known as Soma had donated a stone slab for an enclosure of a stupa. Kakandi is referred to in Manimekhalai as one of the names of Kaviripoompattinam. It is described that when Parasurama was destroying the race of Kshatriyas, the then Chola king who was also a Kshatriya, Kandan by name had entrusted the care of city Kaveripattinam to Kakandan, a son of Ganika and went to forest.

Poompuhar was known by several names in ancient period *viz* Puhar, Kaveripattinam, Kakhandi, Campapathi, Colapattinam and Kaberis Emporium. Sangam Literature such as Ahananuru, Purananuru, Silambu, Manimekhalai, the prakrit works like Milindapana, Abhidammavataram, Buddhavamsattakatha, Buddhist Jataka tales and the foreign notices like Geography of Ptolemy, the anonymous Periplus Mari Erythriya, the work of Pliny and few ancient inscriptions shed valuable light on the nature and function of this vast city.

Poompuhar is said to have been divided into three major divisions, *viz.* Maruvurpakkam, Pattinappakkam and Nalangadi. Maruvurpakkam was situated on and adjacent of the sea shore, Pattinappakkam was on the western side while Nalangadi was in between the Maruvurppakkam and Pattinappakkam.

Settlements of foreign merchants who used ships for their commercial purpose, streets of vendors who were selling spices, perfumes and flowers, habitation of weavers who were manufacturing cloths by silk, hair and cotton, wide streets of those who sold precious stones, streets of shops which sold grains; artisans, musicians, artists, sculptors and fishermen were located in Maruvurppakkam.

In Pattinappakkam, the temples dedicated for Siva, Arumugan, Vishnu, Baladeva, the palace building and the adjoining big streets where the residences of royal personages, military officials, wealthy merchants, cultivators and the performers of classical arts were situated.

Since Nalangadi was located in a natural grove, in between Maruvurppakkam and Pattinappakkam it was easily accessible both by the residents of those two divisions.

In addition to these three major divisions, there were number of groves, gardens like Ilavantikaiccolai, Uyyavanam, Kaveravanam, Campapativanam and Uvavanam and Manrams such as Vellidaimanram,

Ilanjimanram, Pavaimanram, Nedungalmanram. The war trophies like Toranavayil (Gateway) and Muthuppandal (Pandal made of pearls), brought from various other regions were also placed in prominent places.

The port of this city is described as very busy and crowded during Chola period. The merchandise exported were stamped with tiger symbol indicating that they were from Chola country. Merchants from all parts of India and from South East Asia thronged at this city seeking marketing for their commodities. Articles from Ganges region, food products from Ceylon and spices from Java had been imported. Not only the merchants but also the artisans of different regions such as Avanti, Magatham and Mahratta had also gone over here to create a number of religious edifices dedicated to various gods and secular buildings for royal personages.

From Sangam literature it is understood that this city was ruled by successive Chola kings *viz.* Ilanchetchenni of Neytalanganal, Chetchenni Nalangilli, Killivalavan and Karikalvalavan. The following famous poets are also said to have hailed from this famous city Kantarattanar, Karikkannanar, Centan Kannanar, Chenkannanar and Napputanar.

Such a great and magnificient city is said to have been submerged under the sea due to non celebration of Indra festival. But according to the hymns of Saiva saints and inscriptions it is found that the entire city had not been lost. Because the Saiva saints sang the principal deity of Pallavaniccuram as the God of Puhar Pallavaniccuram.

It means that Pallavaniccuram was situated as a suburb of Puhar during 7th century A.D. Hence it is understood that Puhar had retained its fame and predominent position even during 7th century A.D.

The excavations conducted on the shore of Kaveripoompattinam revealed that there are some structures still on the shore itself. The wharf at Kilaiyur, the water reservoir at Vanagiri and the Buddha Vihara at Melaiyur are the unmistakable evidences for the existence of ancient city under the earth of the shore. But the possibility of the submersion of a part of the city is still not ruled out.

Hence the preliminary survey on the sea off the shore of Kaviripoompattinam began in the year 1981. This exploration was carried out by the joint effort of Tamilnadu State Department of Archaeology and the National Institute of Oceanography, Goa.

The exploration was made by deploying Side scan sonar, Echo sounder and Megnetometre. These sophisticated machines showed some tangible results on the graphs. Three peaks measuring about two to three metre height have been located. The National Institute of Oceanography had suggested the undertaking of intensive exploration by sending divers into the sea.

On the advice of the National institute of Oceanography, State Department of Archaeology submitted a proposal to Government for carrying out the intensive exploration. Government were pleased to grant an initial sanction of about 10 lakhs Rupees for the year 1990-91. After having made necessary

arrangements for the survey, the exploration had started on 25th February 1991 on the sea off the shore of Poompuhar.

During this season Geophysical survey was also conducted first to locate the objects. This survey was done by a team of Scientists of C. S. I. R. First they located a shipwreck under sea, about 70 feet in depth and about 4·5 k.m. away from the sea shore. When this shipwreck was examined by trained divers, it was found that there were considerable number of ingots some of which bearing the legend W. Blackett written in English script on one side and the year 1792 on the other side. Hence it is clear that this shipwreck might have occurred in the year 1792 or after.

Further survey had revealed that there is a row of structures under sea in shallow waters about 200 to 300 metres away from the sea shore. A group of structure is located near the Kaveri confluence, another just opposite to the present Kannagi statue and a few just opposite to the present light house. When one site was examined by sending divers, it was found that the structure was completely covered by sea sand, and is about one metre below the sea bed. Due to the transportation of sand by tides the clear visibility was not found. However with great effort the divers could collect few sand stone slabs, a brick and some potsherds. These artefacts confirm that there could have been habitational structure.

During the closing period of exploration the Scientists were able to locate one big site surmising

that it could be a big structure of Sangam age Then it became the centre of intensive survey. Divers were sent to explore thoroughly. First they paid their attention to decide if it could be a structure or a sea rock. Finally they came to the conclusion that it was a man made structure. Then they took measurements and drew drawings on graph sheet. They brought some sample of stones that were found used for construction. These stones appear to be either sandstone or laterite.

This structure appears to be in apsidal shape facing to North. The thickness of the wall runs about one to two metres. At some places the height of the wall goes upto five to six metres. Total length of the structure is about 20 metres and the width about 15 metres. Hence the total area comes to about 300 square metres. It is about 23·5 metres in depth.

This place was traditionally known as Karaiyappar.

This site is about 4·5 k.m. away from sea shore If this structure is proved to be one of the structures of ancient city Poompuhar, then the city could have been extended upto this part. So there could be the possibility of having about half of the city submerged under sea. The reference to the submersion of Poompuhar in literature has clear bearings and is proved beyond doubt by the material evidence. Further survey would reveal more facts about the glorious city Poompuhar.

# பூம்புகார் ஆழ்கடல் அகழாய்வு

சங்க காலச் சோழ மன்னர்களின் சீர்சால் தலைநகராகவும் சிறப்பு மிகு துறைமுகப் பட்டினமாகவும் விளங்கிய பெருமைக் குரியது காவிரியாறு கடலோடு கலக்கும் கழிமுகத்தில் அமைந்த பூம்புகார் என்னும் பெருநகரமாகும். காவிரியின் இருமருங்கும் நான்கு காதத்தூரம் மாட மாளிகைகளுடன் கூடிய பெரு நகரமாகப் பொலிவுற்று காட்சியளித்ததாக இலக்கியங்களில் குறிக்கப்படு கின்றது. பூம்புகார் அகழாய்வில் கிடைத்த கரிமங்களின் ஆய்வுமூலம், இப்பண்டைய நகரம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலேயே சிறப்புடன் விளங்கியிருந்தது உறுதியாகிறது. பார்கூத் என்ற இடத்தில் கட்டப்பட்ட தூபியின் வேலிக் கற்களுள் ஒன்றைக் கொடை யளித்த பௌத்தப் பெண் துறவியான சோமா என்பவர் 'காகந்தி' என அந்நாளில் வழங்கப்பட்ட, இக்காவிரிப்பூம்பட்டினத்தைச் சேர்ந்தவர் என்பது அங்கு பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டினால் அறிய முடிகிறது. அக்கல்வெட்டு கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. காகந்தி என்ற பெயர் காவிரிப்பூம்பட்டினத்திற்கு வழங்கப் பெற்ற பல பெயர்களுள் ஒன்று என்பதை மணிமேகலை மூலம் அறிகிறோம். சத்திரிய வம்சத்தினையே பூண்டோடு அழிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு, பரசுராமன் அலைந்த போது பூம்புகாரில் அரசனாக விளங்கிய கண்டன் என்னும் சத்திரியன், கணிகையொருத்தியின் மகனாகிய காகண்டன் என்பானிடம் அரச உரிமையினை ஒப்படைத்து விட்டுக் காட்டிற்குச் சென்றுவிடவே, அக்காகண்டன் பெயரால் இந்நகர் 'காகந்தி' என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

பண்டைக் காலங்களில் புகார், காவிரிப்பூம்பட்டினம், காகண்தி, சம்பாபதி, சோழபட்டினம், கபேரிஸ் எம்போரியம் எனப் பல பெயர் களால் காவிரிப்பூம்பட்டினம் வழங்கப் பெற்றது. சங்க நூல்களான அகநானூறு, புறநானூறு, பட்டினப்பாலை, சிலம்பு, மணிமேகலை ஆகியனவும், மிலிந்த பனா என்னும் பிராகிருத நூலும், புத்தஜாதகக் கதைகள், அபிதம்மாவதாரம், புத்தவம்சத்தகதா ஆகிய பௌத்த நூல்களும், தாலமியின் பயணக் குறிப்புகளும், பெரிபுளூஸ் என்பவரின் எரித்திரியக் கடல் என்னும் நூலும், பிளினியின் குறிப்புக்களும்

கல்வெட்டுக்களும் இந்நகரின் எழில் அமைப்பினையும், மக்கள் வாழ்க்கை முறையினையும் பற்றி மிக விரிவாக எடுத்துரைக்கின்றன.

பூம்புகார் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம், நாளங்காடி என்னும் மூன்று பெரும் பிரிவுகளாக அமைந்திருந்தது. கடற்கரையும் அதையொட்டிய பகுதியும் மருவூர்ப்பாக்கம் எனப்பட்டது. இப் பகுதிக்கு மேற்குப் பக்கத்தில் இருந்த நகர்ப் பகுதி பட்டினப்பாக்கம் என வழங்கப்பட்டது. இவ்விரு பகுதிகளுக்கும் இடையில் மரங்கள் அடர்ந்த பகுதியில் நாளங்காடி இருந்தது.

வேயாமாடம், மாளிகையிடங்கள், யவனர் இருக்கை, கலந்தரு செல்வத்தினால் சிறந்து வாழும் பன்னாட்டு வணிகர்கள் கலந்திருந்து வாழும் கடற்கரையொட்டிய இடங்களும், வண்ணம், சுண்ணம், சந்தனம், மலர்கள், புகைதரும் மணப் பொருள்கள் ஆகியவற்றை விற்கும் நகர வீதிகளும், பட்டு கம்பளி பருத்தி நெசவுத்தொழில் புரியும் காருகர் வாழுமிடங்களும், துகிர், ஆரம், அகில், முத்து, மணி, பொன் ஆகியவை விற்கும் தெருக்களும், கூல வீதியும், பிட்டு, அப்பம், கள், மீன், உப்பு, வெற்றிலை,பாக்கு, கற்பூரம், ஆட்டிறைச்சி ஆகியவை விற்போர் வாழும் ஊர்களும், மணம் மிகுந்த இருப்பிடங்களும், வெண்கலம், செம்பு, மரம், இரும்பு ஆகிய பணிபுரியும் மக்களும், ஓவியர், மண்ணீட்டாளர், பொன்செய் கொல்லர், இரத்தினத் தட்டார், துன்னகாரர், தோல், துணி, கிடை ஆகியவற்றில் பணிபுரிவோரும், குழல், யாழ் முதலான எழுவகை இசைக்கருவிகளை இசைப்போரும், இசை முறையினைத் தெரிந்து தெளிந்த வல்லுநர்களும், கைத்தொழில் புரிவோரும் மருவூர்ப்பாக்கத்தில் வாழ்ந்தனர். அரசன் வாழும் பெருந்தெருவும், கொடிகள் தாங்கப் பெற்ற தேர்கள் உலா வரும் பெருவீதியும், கடைத்தெருவும், பெருங்குடி வணிகர், அந்தணர் இருப்பிடங்களும், வேளார், ஆயுள் வேதர், காலக் கணிதர் ஆகியோர் வாழும் பகுதியும், மேலும், பிறவா யாக்கைப் பெரியோன் (சிவன்) கோயிலும், திருமால், பலதேவன், அறுமுகச்செவ்வேள் (ஆறுமுகன்) அணிதிகழ் கோயிலும் அமைந்திருந்தன. திருமணி குயிற்றுநர், வளைபோழுநர் வாழும் வீதியும், சூதர், மாகதர், வேதாளிகள், நாழிகைக் கணக்கர், கூத்தர்,

கணிகையர், ஆடற்கூத்தியர், ஏவற்சிலதியர், ஆகியோரும், குதிரை வீரர், தேர் வீரர், களிற்றுப்பெருவீரர், படைமறவர் ஆகிய அரண்மனையைச் சுற்றியிருப்போர் வாழும் பரந்த பெருவீதிகளும் பட்டினப்பாக்கத்தில் சிறந்து விளங்கின.

இவ்விரு பகுதிகளுக்கும் இடையே இருபெரு வேந்தர் போரிடும் இடத்து எழும் ஆரவாரம் போன்ற ஓசையினை யுடைத்தாய் நாளங்காடி விளங்கியது. அங்கு கொள்வோர் ஓதையும், கொடுப்போர் ஓதையும் நிலைத்திருந்தது. இங்கு சோழ நாட்டில், பசி, நோய், பகை முதலான துன்பங்கள் நேராது, வசியும் வளனும் சுரக்க வேண்டுமென வாழ்த்தி பெண்கள் கூத்தாடிப் பூசையிடும் பலிபீடம் (பீடிகை) ஒன்றிருந்தது. அதே பலிபீடத்தில் வெற்றி வேந்தன் கொற்றம் கொள்கென வீரர்கள் முரசம் அறைந்து பலிகொடுத்தனர். இவையல்லாமல், வஜ்ஜிர நாட்டு மன்னன் கொடுத்த கொற்றப்பந்தரும் மகத வேந்தன் பகைப் புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும், அவந்தி வேந்தன் உவந்து கொடுத்த தோரண வாயிலும், நகரின் முக்கிய இடத்தில் அழகுற வைக்கப்பட்டிருந்தன.

நகரின் துறைமுகம் மக்கள் கூட்டம் மிகுந்ததாய்க் காணப் பட்டது. மக்கள் அங்கு சுறுசுறுப்பாக இயங்கி வந்தனர். ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின் மீது சோழ நாட்டிலிருந்து செல்கிறது என்பதைக் குறிக்கும் வகையில் புலி முத்திரையிடப் பெற்றிருந்தது. அத்துறைமுகத்தையொட்டிய அங்காடித் தெருவில்;

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமு மகிலும்
தென்கடல் முத்தும் குணகடற் றுகிரும்
கங்கை வாரியுங் காவிரிப் பயனும்
ஈழத்துணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும்.

(பட்டினப்பாலை : 185-193)

நிலம் நெளியும்படியான மிகுந்த அளவில் குவிந்து கலந்து கிடக்கும் தன்மைத்தாய் விளங்கின. இவ்வாறு வணிகம் மட்டு மின்றி, அவந்தி, மகதம், மராட்டியம் ஆகிய நாடுகளில் இருந்து வந்து அதிக அளவில் இங்குக் குடியேறியுள்ள கலைஞர்களும்; தமிழகக் கலைஞர்களும், அரசன் வாழும் அரண்மனைகளுக்குத் தேவையான பல கலைப் படைப்புகளை உருவாக்கினர்.

இம்மூன்று பெரும் பிரிவுகளைத் தவிர, இலவந்திகைச் சோலை உய்யாவனம், கவேரவனம், சம்பாபதிவனம், உவவனம் ஆகிய சோலைகளும், வெள்ளிடைமன்றம், பாவைமன்றம், நெடுங்கல் மன்றம், இலஞ்சிமன்றம் ஆகிய மன்றங்களும் இந்நகரில் கடற் கரையையொட்டி அமைந்திருந்தன.

பூம்புகாரைத் தலைநகரமாகக் கொண்டு நெய்தலங்கானத்து இளஞ்சேட்சென்னி, சேட்சென்னி நலங்கிள்ளி, கிள்ளிவளவன், கரிகால்வளவன் ஆகிய சோழமன்னர்கள் சங்க காலத்தில் ஆட்சி புரிந்துள்ளனர். இந்நகரைச் சேர்ந்த கண்டரத்தனார், காரிக் கண்ணனார், சேந்தங்கண்ணனார், செங்கண்ணனார், நப்பூதனார் ஆகிய புலவர்கள் சங்கப் பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளனர்.

இத்தகைய சிறப்புக்களோடு செம்மாந்து விளங்கிய இப்பெரு நகரம், வானவர் தலைவன் இந்திரனுக்கு உரிய சித்திரை விழா கொண்டாடாதக் காரணத்தினால், கடலுள் மூழ்கிவிட்டதாக மணிமேகலை என்னும் இலக்கியத்தால் தெரியவருகிறது. ஆனால் கி. பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சைவக் குரவர்கள் பல்லவ னீச்சுரம் என்ற கோயில் புகாரில் இருந்ததாகக் கூறி, அப்பல்லவ னீச்சுரத்து இறைவனைப் ‘புகார்ப் பல்லவனீச்சுப் பெருமானே’ என்று பாடியுள்ளனர். எனவே, புகார் முழுவதும் கடலுள் மறையவில்லை என்பது தெளிவாகிறது. இப்பல்லவனீச்சுரம் புகாரின் மருங்கிருத்தல் வேண்டும். ஆதலால், சமயக் குரவர்கள் காலத்திலும் புகார் முக்கிய நகரமாகவே விளங்கி இருந்திருக்கிறது என்று உணரலாம்.

காவிரிப்பூம்பட்டினத்து நிலப்பகுதியில் நடந்த சில அகழாராய்ச்சிகளிலிருந்தும், நிலப்பகுதியிலேயே பல கட்டடங்கள் பூமிக்குள் புதைந்திருக்கின்றன என்பது தெளிவாகியிருக்கிறது. கீழையூரில் கிடைத்த படகுத் துறை, வாணகிரியில் கிடைத்த நீர்த்தேக்கம், மேலையூரில் கிடைத்த புத்த விகாரம் ஆகியவை நகரத்தின் ஒரு பகுதி இன்றைய ஊர்ப்பகுதியிலேயே புதைந் திருக்கிறது என்பதைத் தெளிவாக்குகின்றது. எனினும் கடலினுள்ளும் ஒரு பகுதி மறைந்திருத்தல் கூடும் என்பதும் மறுக்க முடியாத உண்மையாக உள்ளது. கடலுள் மீன் பிடிப்பதற்காகச் செல்லும் மீனவர்கள் கற்சிலை, செப்புச்சிலை ஆகியவைகளைக் கடற்பகுதியிலிருந்து எடுத்து வந்திருப்பதும் கடலுள் சில இடங்களில் மேடுகள் காணப்படுகிறது என்று கூறுவதும் மேற்காணும் கருத்தை வலியுறுத்துவதாகும்.

எனவே, இவைகளைக் கருத்தில் கொண்டு 1981 ஆம் ஆண்டு பூம்புகார்க் கடற்கரையையொட்டிக் கடலினுள் முதற்கட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையும், கோவாவில் உள்ள தேசியக் கடலாய்வு நிறுவனமும் இணைந்து இந்த ஆய்வினை மேற்கொண்டன.

இந்த முதற்கட்ட ஆய்வு, சைடு ஸ்கேன் சோனார், எக்கோ சவுண்டர், மேக்னடோ மீட்டர் ஆகிய கருவிகளைக் கொண்டு செய்யப்பட்டது, இந்த நுண்ணிய கருவிகள் பல பயனுள்ள தடயங்களைக் கண்டறிந்தன. இரண்டு முதல் மூன்று மீட்டர் உயரமுள்ள பொருள்கள் கடலுள் மூழ்கி இருப்பது அறியப்பட்டது. இப்பொருள்கள் சுமார் 10 மீட்டர் அடிப்பரப்பைக் கொண்டதாகவும் கண்டறியப்பட்டது. ஆய்வுக்குப் பின்பு தேசியக் கடலாய்வு நிறுவனம் முக்குளிப்போரை அனுப்பி மேலும் தீவிர ஆய்வு செய்ய வேண்டும் என்று அறிக்கை அளித்தது.

இந்நிறுவனத்தின் பரிந்துரையின் பேரில், தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கடலாய்வு செய்வதற்கான கருத் துருவினை அரசுக்குச் சமர்ப்பித்தது. அரசும் அக்கருத்துருவினை

ஏற்று, 1990-91 ஆம் ஆண்டில் 10 இலட்ச ரூபாயினை முதற் கட்டமாக அனுமதித்தது. தேவையான ஏற்பாடுகளுக்குப் பின்னர், கடந்த பிப்ரவரித் திங்கள் 25 ஆம் நாள் முறையான கடலாய்வுப் பணி பூம்புகார்க் கடற்பகுதியில் தொடங்கப் பெற்றது.

ஆய்வின் முதற்கட்டமாகக் கடலினுள் ஏதேனும் பொருட்கள் இருக்கின்றனவா என்று கண்டறியும் வகையில் கடலுள் நிலவியல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வினை மேற்கொண்ட சி. எஸ். ஐ. ஆர்.-ஐச் சேர்ந்த அறிவியலறிஞர் குழு, கடற்கரையி லிருந்து நாலரை கிலோ மீட்டர் தொலைவில் 'கப்பகரப்பு' என்னு மிடத்தில் சுமார் 70 அடி ஆழத்தில் ஒரு சிதைவுற்ற கப்பலைக் கண்டறிந்தது. பயிற்சி பெற்ற நீர்மூழ்குவோரை அனுப்பி அக்கப்பற் பகுதியை ஆய்வு செய்ததில் முழு கப்பலும் மண்ணுள் புதைந்திருப்பதும், இரு பெரும் இரும்பு வளையங்களும், ஒரு பீரங்கியும் இருப்பதும் கண்டறியப்பட்டது. மேலும், கப்பலின் மேற்பகுதியைச் சுத்தம் செய்தபோது அதில் சில ஈயத் துண்டுகள் இருப்பதும் தெரியவந்தது. அவற்றில் ஒருபுறம் "டபிள்யூ பிளாக் கெட்" என்ற ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பெயரும், மறுபுறம் 1792 என்ற ஆண்டும் எழுதப்பட்டிருந்தது. இதிலிருந்து இந்த கப்பல் கி. பி. 1792-லோ அதற்குப் பின்போ கடலுள் மூழ்கி இருத்தல் வேண்டும் என்று ஊகிக்க முடிகிறது.

மேலும், மற்ற பகுதிகளில் ஆய்வு செய்ததில், கடற்கரையிலிருந்து 200 முதல் 300 மீட்டர் தொலைவில், கடலினுள் வரிசையாகச் சில கட்டடப் பகுதிகள் இருப்பது அறியப்பட்டது. காவிரி கடலுள் கலக்கும் இடத்திலும், தற்போது கண்ணகி சிலை இருக்குமிடத்திற்கு எதிரிலும், கலங்கரை விளக்கத்திற்கு எதிரிலும், வேறு சில இடங் களிலும் கட்டடப் பகுதிகள் இருப்பது தெரிய வந்துள்ளது. இவற்றுள் காவிரி கடலோடு கலக்கும் பகுதியில் உள்ள கட்டடப் பகுதியை ஆய்வு செய்வதற்குக் கடலுள் மூழ்குவோர் அனுப்பப் பட்டனர். அந்தக் கட்டடப் பகுதிகள் முழுவதுமாக, மணலால் மூடப்பட்டிருப்பதும், அம்மணலே சுமார் ஒரு மீட்டர் அளவு

மேடிட்டிருப்பதாகவும் தெரிகிறது. எனவே உண்மையான கட்டடங்களின் அமைப்பு தெரிய இயலாத நிலையில் உள்ளது. இருப்பினும் மிகுந்த முயற்சிக்குப் பின் மூழ்குவோர், சில மணற் கல்லால் ஆன பொருள்களையும், ஓடுகளையும், செங்கற்களையும் எடுத்து வந்தனர். மேற்காணும் தொல்பொருள்களால் இப்பகுதிகள் மக்கள் வாழ்ந்த இடமாகவே இருந்திருத்தல் வேண்டும் என்ற முடிவுக்கு வர முடிகிறது.

ஆய்வின் இறுதிக் கட்டத்தில் கடலுக்கடியில் மிகப் பெரிய கட்டடப் பகுதியொன்று இருக்கிறது என்று அறிவியலறிஞர்கள் ஓரிடத்தினைக் கண்டறிந்தனர். அவ்வாறு கண்டறியப்பட்டது முதல் அப்பகுதி விரிவாக ஆய்வதற்குரிய ஆய்விடமாக அமைந்து விட்டது. மூழ்குநர் பலர் கடலுள் மூழ்கித் தீவிர ஆய்வு செய்தனர். முதலில் இங்கு இருப்பது கட்டடப் பகுதியா அல்லது இயற்கையான பாறையா என்றறிவதில்தான் கவனம் செலுத்தப் பட்டது. இறுதியில் மனிதன் உருவாக்கிய கட்டடப் பகுதியே இவை என்ற முடிவுக்கு வந்தனர். உடனடியாக, அதன் அளவுகள் எடுக்கப்பட்டன. சரியான படங்கள் வரையப்பட்டன. அங்கிருந்து கட்டடத்தின் சில கற்கள் கடலுக்கு மேலே கொண்டு வரப்பட்டன. அவை பெரும்பாலும் மணற் கல்லாகவோ, அல்லது செம்புறைக் கல்லாகவோ அமைந்திருந்தன.

அக்கட்டடப் பகுதி வடக்குப் பக்கம் நோக்கி தூங்கானை வடிவில் அமைந்திருப்பதாகத் தெரிகிறது. ஒன்று அல்லது இரண்டு மீட்டர் அகலமுடைய சுவரினைக் கொண்டிருக்கிறது என்றும் அதன் உயரம் சில இடங்களில் 5 முதல் 6 மீட்டர் உள்ளது என்றும் 20 மீட்டர் நீளமும், 15 மீட்டர் அகலமும் உடையதாக இருக்கிறது என்றும் மூழ்குநர்கள் மூலம் தெரியவருகிறது.

இப்பகுதி 'கரையைப்பார்' என்று மரபு வழியாக பூம்புகார் மீனவர்களால் வழங்கப்பெறுகின்றது.

இவ்விடம் கடற்கரையிலிருந்து சுமார் நாலரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இக்கட்டடப் பகுதி பண்டைக் காலத்தைச் சேர்ந்ததாக இருக்குமேயானால் பூம்புகார் நகரமும் துறையும் இவ்வளவு தூரம் வரையில் பரவியிருந்தது என்ற முடிவுக்கு வர இயலும். அந்நிலையில் நகரின் பாதியளவு கடலுள் மறைந்திருக்க வாய்ப்புள்ளது. இலக்கியங்கள் வாயிலாக அறிந்த செய்தி, நேரடியான வரலாற்றுத் தடயங்கள் மூலம் உறுதி செய்யப்படுகிறது. எதிர் வரும் ஆண்டுகளில் இங்கு நடைபெற இருக்கும் கடல் ஆய்வுகள் மேலும் பயனுள்ள பல வரலாற்றுத் தடயங்களை வெளிப்படுத்தி பூம்புகாரின் பழம்பெருமையை நிலைநாட்டும் என உறுதியாக நம்பலாம்.

